# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| பத்திரக் கிரயம். | |
|---|---|
| யாழ்ப்பாணம் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: " | ரூ. 9.40 |
| தொலைப்பகுதி: " | ரூ. 9.40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |
| முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும். | |

| விளம்பர விகிதம். | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| " | அரைக்கலம் | ரூ. 5-00 |
| " | காற்கலம் | ரூ. 3-15 |
| " | ஒரு அங்குலம் | சதம் 65 |
| அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி. விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றி ஏவனிக்கப்படா. | | |

புத்தகம்—௬௯. } யாழ்ப்பாணம்:—விபவ ஆனி மீ கூ, (1928 ஜூன் 14) வியாழக்கிழமை. { இலக்கம்—௩௪.


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவமபூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்தவிநாயகன்றுள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதைச் சான விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரூ, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாலு, சார்ப்பருப்பு, பாதமபருப்பு, சாத்தாவாரி, கீர்முனளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம, அப்ரகபஸ்பம, பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம சாமபிராணிப் பதஙகம் இன்னும அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும பக்கவாய்வு, இருமல், காசம பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம, கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும நோய்கள நீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைருத்தலுக்கு ரூபா ௧௦. கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாபிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன்மனி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

## ஜாதக விளம்பரம்.

ஜாதகபலன் அறியவிரும்புவோர் ஜாதகக் குறிப்பையாவது, அல்லது பிறந்த வருஷம், மாதம், திகதி, கிழமை, நேரம், ஆண், பெண், பிறந்த ஊர் இவைகளைத் தெளிவாக எழுதி அனுப்பித் தற்கால பலன் அறிய ரூபா 1—00

ஜாதகக் குறிப்புக்கள் ரூபா 1, 2, 7, வரையிலும், ஜாதகங்கள் 10 ரூபாய் முதல் 150 ரூபா வரையிலும் எழுதிக்கொடுக்கப்படும்.

ஆருடம் ஞாயிறு வியாழக்கிழமைகளில் சொல்வோம். கடித மூலமாய் அறிய விரும்புவோர் கடிதம் எழுதும் நேரத்தைக் குறிப்பிட்டு எழுதவும். மூன்றுகேள்விகளுக்குட்பட ரூபா 1. மேற்பட்ட ஒவ்வொருகேள்விக்கும் சதம் 25 (அணா 4.)

மற்றும் விபரங்கள் கடித மூலமாயறிந்து கொள்ளலாம். பதில் வேண்டுவோர் முத்திரை (ஸ்டாம்பு) அனுப்புதல் வேண்டும்.

விலாசம்:—

க. கனகசபை.
சோதிடர்,
அன்னசத்திரத்தடி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(Q. 101.)

## இலங்கை ஆயுர்வேத வைத்தியகல்லூரி யாழ்ப்பாணம்.

மேற்படி கல்லூரியில் சேர்ந்து ஆயுர்வேத வைத்தியத்தையும் ஒருங்கே கற்க விரும்புவோரும் ஆயுர்வேத சித்த வைத்தியத்தைமட்டும் (கொறஸ்பொண்டன்கோஸ்) லிகிதகற்பனை மூலமாகக் கற்று டிப்பிளோமா என்னும் அரங்கேற்றப் பத்திரம் பெற விரும்புவோரும் தங்களது மனுப்பத்திரங்களை மேற்படி கல்லூரித் தலைவருக்கு அனுப்பி அக்கற்பனைக்குரிய விஷயங்களைத் தெரிந்துகொள்க. அநுபவசித்தியுள்ள நசர்மார்களுக்கும் சுதேச வைத்தியர்க்கும் கற்பனையின் காலஅளவு அவர் அவர்க்குரிய அநுபவசித்திக்குத் தக்கதாய்க் குறைக்கப்படும்.

இலங்கா ஆயுர்வேத வைத்திய கல்லூரித் தலைவர்.

(M. 66)

## கௌரவ வேலர் பொன் இராமநாதனவர்கள் இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரை நடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா 2 அணா 8.
2. பகவத்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
சுன்னாகம், யாழ்ப்பாணம்.

(H. 61)

## காணி விற்பனவு.

வாழைத் தோட்டம் எனப்படும் 100 ஏக்கர் கொண்ட நிலம். முழுவதும் தென்னந்தோட்டம். பழைப் புகைரத ஸ்தானத்திலிருந்து 5மைல்தூரத்தி லுள்ளது. விபரமறிய விரும்புவோர் எமக்குத் தெரிவிக்கவும்

V. வல்லிபுரம்,
கந்தர்மடம்.
யாழ்ப்பாணம்

(M. 64.)

## வெற்றிலை! வெற்றிலை!! வெற்றிலை!!!

வியாபாரிகளே! உங்களுக்கு வெற்றிலை தேவையானால் கீழ்க்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதுங்கள். இலங்கையிலுள்ள மிகவுந் திறமான வெற்றிலை இங்கே மிக மலிவான விலைக்குக் கிடைக்கும். எந்தத் தினிசான வெற்றிலையும் இலங்கையிலுள்ள எந்த இடங்களுக்கும் புகைரதமூலமாக எப்பொழுதும் அனுப்பலாம். விசேஷமாகக் கலியாணவீடு மற்றும் கொண்டாட்ட தினங்கள் முதலியவற்றிற்கு வெற்றிலை அனுப்புவதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக விருக்கிறோம். சென்ற 36 வருஷங்களாக இலங்கையிலுள்ள பல பாகங்களிலும் மிகவும் திருப்திகரமான வியாபாரஞ் செய்திருக்கிறோம்.

எமது விலாசத்திற்கு ஒரு தந்தி மணி ஓடர் சமீபமான புகைரதஸ்தானத்தைக் குறிப்பிட்டனுப்பினால் அடுத்த புகைரத மூலமாகவே வெற்றிலை யனுப்புவோம். அயலூர்களுக்கே எத்தக்காலமும் நாங்கள் வெற்றிலை அனுப்பிப் பெரிய வியாபாரஞ் செய்துவருகிறோம். ஒருமுறை எங்களிடத்தில் நீங்கள் வெற்றிலை வாங்கினால் பின் வேறோரிடத்திலும் வாங்கமாட்டீர்கள். இது திண்ணம்! எங்கள் தந்திவிலாசம் ஆக இரண்டு சொற்களேயுடையன.

மற்றும் விபரங்களுக்கு எழுதவும்.

S. P. A. மகிறிஸ் அப்புகாமி,
கம்பகா.

S. P. A. Magiris Appuhamy,
Gampaha - W. P

தந்தி விலாசம்:—
மகிறிஸப்புகாமி,
கம்பகா.
Tel. Add:—"Magrisappuhamy",
Gampaha

(H. 62)

## சுப்பிரமண்ய ஜோதிடம்.

இந்தியா தேசமெங்கும் தலைமைபெற்றுப் பிரகாசிக்கும் ஜோதிடாலயம் இதுவே.

உங்கள் அதிஷ்டத்தை ஏன் தெரிந்துகொள்ளக் கூடாது. இன்றே யெழுதி உங்கள் அதிஷ்டத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.

உங்கள் எதிர்காலப் பலனைப்பற்றிய 6 கேள்விகளுக்குப்பதில் எழுத ரூபா 1-00. மேல் தனிக் கேள்விகளுக்கு அணா 4. ஒருவருஷப் பலன் எழுத ரூபா 2-00. கடிதம் எழுதும்போது உள்ள நேரத்தையாவது ஜாதகக் குறிப்பையாவது தெரியப்படுத்தவேண்டியது. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

### சர்வஜய வசீகரணி.

தாயித்தை 1-க்கு ரூபா 2—8—0

இது எல்லாவிதமான காரியங்களிலும் ஜெயம்பெற்று வருவதுமன்றி செய்வினை போய் நல்வினை யுண்டாக்கும். எல்லாவிதமான காரியங்களிலும் அனுகூலப்படும்.

மானேஜர்,
ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஜோதிட நிலயம்.
திருத்தணி, சித்தூர்ஜில்லா.

(Q 103)

## தங்கப்பவுண் அடையாளமிடப்பட்ட கொளுக்கி ஓடுகள்.

இலங்கையில் இதுவே திறமான ஓடாக மதிக்கப்பட்டுவருகிறது. இது மிக உரமானது; நீடித்திருக்கத்தக்கது; அழகானது; எல்லாரும் இதனையே விரும்புகிறார்கள்.

காரணம்:

இத்தச்சாதி ஓடுகளின் விசேஷம் அநுபவத்திற் கண்டது. இந்த ஓட்டைக் காங்கள் இங்கே தருவித்தபின் இதனை எல்லாரும் வாங்கி உபயோகிக்கின்றனர். ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள். ஓடுகள் யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எங்கள் பண்டசாலையிலும், பருத்தித்துறையிலுள்ள எங்கள் பண்டசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

(Q. 100)

## சமய சந்தேகம் ஏன்?

இந்தியாவிலும் மற்றுங் கீழைத்தேசங்களிலுமுள்ள அநேகர் உபாதைப்படுகின்றார்கள்.

ஏனெனில் அநேகமான மருந்துகளில் மிருகக்கொழுப்புச் சேர்ந்திருப்பதால் அவர்கள் அதைப் பயங்கரத்தோடு வெறுக்கின்றார்கள்.

மிருகக்கொழுப்புச் சிறிதுஞ் சேராத

### லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

என்னும் மருந்தினால் உண்மையான சுகத்தை யடையலாம்.
இந்துக்களாயினுஞ்சரி மகமதியர்களாயினுஞ்சரி
கிறிஸ்தவர்களாயினுஞ்சரி புத்தர்களாயினுஞ்சரி எல்லோரும் நம்பிக்கையோடு உபயோகிக்கலாம்.

எவ்வித வலிப்பையும் நோவையுந் தீர்ப்பதற்கு இந்தியாவில்கைகண்ட மருந்து.

எல்லாரசாயனசாலைகளிலும் மருந்துக்கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(Y. 51.)

## திருவாலங்காட்டுத் தேர்த் திருப்பணி.

—:o:—

விபவ வருஷ சித்திரை மீ முதல் 12மாசங்களுக்குப் பொருளுபகரிக்கப் பொருந்திக்கொண்டவர்கள்.

இரண்டாம் மாசம் பொருளுபகரித்தவர்கள்.

| | |
|---|---|
| வைத்தீஸ்வரசுவாமிகோவில் வண். | 10-00 |
| ஸ்ரீ க. முத்துக்குமாரு வைத்தியர் | 10-00 |
| ,, சித. மு. ப. சிதம்பரநாதச்செட்டியார் | 10-00 |
| ,, சி. மு. கணபதிப்பிள்ளை | 10-00 |
| ,, வி. சி. விநாசித்தம்பி | 10-00 |
| டாக்குத்தர் ஈ. இ. பொன்னம்பலம் | 10-00 |
| ஸ்ரீ வை. சி. சி. குமாரசுவாமி | 5-00 |
| ,, ஈ. தங்கம்பிள்ளை | 5-00 |
| ,, சி. சி. சண்முகம் | 5-00 |
| ,, மு. வேலுப்பிள்ளை | 5-00 |
| ,, இ. க. சுப்பிரமணியம் | 5-00 |
| ,, பொன்னுத்துரை | 5-00 |
| ,, கா. சபாரத்தினம் வைத்தியர் | 5-00 |
| ,, சுந்தரம் | 5-00 |
| ஸ்ரீமதி க. சுந்தரம் | 5-00 |
| சின்னத்தம்பி, விசுவலிங்கம் கடை உண்டிகைப் பெட்டிகளால் | 13-55 |
| இந்து சாதனக் காரியாலயம் | 2-00 |
| ஸ்ரீ வி. தம்பிபஞ்சாக்ஷரம் கண்டி | 5-00 |
| ,, க. ஆ. கந்தப்பசேகரன் கொழும்பு | 5-00 |
| | 130-55 |
| 20-5-28-ல் வெளிப்படுத்தியதொகை | 128-50 |
| ஆக | 259-05 |

வண்ணார்பண்ணை, 13—6—28. சி. மு. சின்னத்தம்பி. (Ms. 1230)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவ வருஷ ஆனி மீ கஉ வியாழக்கிழமை.

## சமயப்பிரசங்கம் வேண்டும்.

—:※:—

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்—செல்வத்துளெல்லாந்தலை"

என்றபிரகாரம் ஒருவர் விசைவிற்றிருத்தமடைந்து நல்வழிப்படுவதற்குச் சிறந்த சாதனமாகவுள்ளது அறிவுடையோர் செய்யும் பிரசங்கம் முதலாம் செவிச்செல்வமேயாகும். பலகாலமாகக் கற்று அறியவேண்டிய ஒரு விஷயத்தை அறிவுடையோர் தமது பிரசாரணத்தால் அற்பநேரத்திற் புகட்டிவிடுதல் முடியும். இக்காரணம் பற்றியே எல்லாச்சாதியாரும் எல்லாச் சமயத்தாரும் தங்கள் சாதியையேனும் சமயத்தையேனும் விருத்திசெய்வதற்குப் பிரசாரணம் முதலியவற்றை அநுசரித்து வருகின்றனர்.

நமது நாட்டிலே அந்நியமதங்கள் தலைப்பட்டபின் சைவப்பிரசங்கங்கள் அவசியமும் வேண்டியவாயின. இந்த உண்மையை உணர்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் போன்ற மகான்கள் சைவப்பிரசங்கங்களைப் பெரிதும் கையாண்டுவந்தனர். வித்தியாசாலைகளிலும் ஆலயங்களிலும் மற்றும் பொதுவான இடங்களிலும் சமயப் பிரசங்கங்கள் காலந்தோறும் அறிஞராற் செய்யப்பட்டு வந்தன. வசனமாகச் சொல்லப்படும் விஷயப் பிரசங்கங்கள் பாமரசனங்கட்கு அதிகம் சுவைக்காமையைக்கண்டு பிற்காலத்துள்ளார் சங்கீத கதாப்பிரசங்கங்களைச் செய்தலாகத் தலைப்பட்டனர். இந்தச் சங்கீதகதாப்பிரசங்கத்தை அதிக திறமையோடு யத்திரசம் ததும்பும் வண்ணஞ் செய்து சனங்களிடத்தில் தெய்வபக்தியையும் புலாலுண்ணாமை முதலிய ஆசாரங்களையும் விருத்தி செய்து வந்தவர் ஸ்ரீ சங்கரசுப்பிரமணிய சச்சிதானந்தசாஜயோகிகளாவர்; நாவலரவர்களைப் பின்பற்றி விஷயப்பிரசங்கங்களையும் யோகிகளைப் பின்பற்றிச் சங்கீதகதாப்பிரசங்கங்களையும் பயின்று காலந்தோறும் இடங்கள்தோறும் பலர் செய்து வரலாயினர். ஆனால் இப்பொழுது சிலகாலமாக அரசியல் விஷயமான பிரசாரணங்களும் சாதிசேற்றுமைகளையிட்ட பிரசாரணங்களுமேயல்லாமற் சைவசமயப் பிரசங்கங்கள் அருகத் தலைப்பட்டுக்கொண்டன. சமயசாஸ்திரங்களையும் மற்றும் இலக்கண இலக்கியங்களையும் புராணேதிகாசங்களையுங் கற்று விஷயப்பிரசங்கங்களைச் செய்வாரையும், இவற்றொடு சங்கீதத்தினையும் பயின்ற கதாப்பிரசங்கங்களையும் காண்டல் அரிதாயிருக்கின்றது.

யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் உள்ள சைவக் கோவில்களில் இடையிடையே நடைபெற்று வரும் புராணபடனமும் ஒரு பிரசங்கமேயாகும்; ஆனால் இது பிரசங்கத்தைக்காட்டிலும் மேலான பயன்றரத்தக்கதாகும். இப்புராணத்தை முறைப்படி படிப்பாரும் பயன் சொல்வாருந் தேய்ந்து வருகின்றனர்; தமிழ்க்கல்வியை அரசாங்க வித்தியாபகுதியார் அதிக ஊக்கத்தோடு வளர்க்கத் தலைப்பட்டமையினாற்போலும் புராணங்களைப் பிழையறவாசிப்பாரும் பதச்சேதஞ் செய்வாரும் பயன் சொல்வாரும் குறையலாயினர்; விஷயப்பிரசங்கஞ்செய்வோர் கதாப்பிரசங்கஞ்செய்வோர் புராணபடனஞ் செய்வோர் எனப்படும் இந்த முத்திறத்தாரையும் அருகவிடலாகாது; இவர்களே சைவசமயத்தையும் ஒழுக்கங்களையும் வளர்ப்பவராவார்கள். இவர்களுட் செல்வமுள்ளார் அபிமானம் பற்றி யாதும் வேதனம் பெறாது தாம் செய்யத்தக்கபிரகாரம் சமயபோதனை செய்தல் நன்றும் சீவனார்த்தமாக வேறுமுயற்சிகளில் ஈடுபட்டிருப்பாருள்ளுஞ் சிலர் இவைகளைச் செய்து வருகின்றார்கள். அப்படிப்பட்டவர்களை நன்கு சன்மானித்து ஊக்கப்படுத்துதல் வேண்டும்.

சைவபரிபாலனசபை, விவேகானந்த சபை, சைவவித்தியாசங்கம் முதலாஞ் சபையினருஞ் சங்கத்தினரும் இப்படிப்பட்ட திறமைவாய்ந்தவர்களை நன்கு சன்மானித்து ஊக்கப்படுத்துதல் வேண்டும். இங்குள்ள பிரதான தேவஸ்தானங்களின் அதிகாரிகளும் இப்படிப்பட்டவர்களைச் சன்மானித்துத் தத்தம் ஆலயங்களிலும் மற்றை ஆலயங்களிலும் உற்சவகாலங்களில் இவர்களைக்கொண்டு பிரசங்கஞ் செய்வித்தல் வேண்டும். சைவக்கல்லூரிகளிலும் வித்தியாசாலைகளிலும் மாசம்ஒருமுறையேனும் சமயப்பிரசங்கங்கள் செய்வித்தல்வேண்டும். இங்ஙனஞ் செய்தாற்றான் நமது சமயம் விருத்தியடைந்து வரும்; சனங்கள் கல்வியறிவொழுக்கங்களிற் சிறப்படைவர்; புலால் புசித்தல் மதுபானம் கள்ளுக்கடைகட்குச் சம்மதஞ் சொல்லுதல் முதலாந் தீமைகள் குன்றும்.

## உலகம் பலவிதம்.

(முற்றொடர்.)

இனி, தாழ்ந்த வருணத்தாரென்றிருப்பவர்களெல்லாரும் போலிச்சுவாதீனத்தைமாத்திரம் விரும்பி அதன் பொருட்டு ஏனைய சாதியினரோடு வாதாடி அவர்களைக் குறைகூறி அவமதிக்கின்றார்களேயன்றி, தாங்கள் தங்களைத் திருத்திக்கொள்ளுதல்வேண்டும், மச்சமாமிச போசனத்தையும் மதுபானத்தையும் தவிர்த்தல்வேண்டும், துப்புரவாயிருத்தல்வேண்டும் என்ற இவைகளையிட்டுச் சிந்திக்கின்றார்களில்லை. "மாமிச போசனத்தை விடுங்கள், மதுபானத்தை யொழியுங்கள், ஒழுக்கமாய் நடவுங்கள்" என்று யாராயினும் அறிவுடையோர் இவர்களுக்குச் சொன்னால் "ஏன் மேல்சாதியாரென்றிருப்பவர்களுள் கள்ளுக் குடிப்பாரில்லையா? மாமிசமுசிப்பாரில்லையா? ஒழுக்கமற்றவரில்லையா?" என்று அடாத நியாயம் பேசுகின்றார்கள். ஒழுக்கமற்றவர்கள் எந்தச் சாதியிலிருப்பினும் அவர்கள் அவமதிக்கப்படுதலையும் ஒழுக்கமுடையார் எந்தச் சாதியிலிருப்பினும் அவர்கள் மதிக்கப்படுதலையும், இவைகளுக்குத் திருவள்ளுவர் திருநாளைப்போவார் முதலானோர் உதாரணமாக விளங்குவதையும் இவர்கள் சிந்திக்கின்றிலர். இனி, உயர்ந்த சாதியாரென்றிருப்போரும் காலவர்த்தமானங்களை அநுசரித்து நடப்பதை விடுத்து, இந்தச் சாதிவிஷய மொன்றில்மாத்திரம் தம் முன்னோரைப்போல் அதிகாரங்காட்டி நடக்க முயன்றால் அது முடியுமா? இப்படியான தலைநடுமாற்றங்கள் நிகழும்போது மழை எப்படிப் பெய்யும்.

* * *

இக்காலத்திலேயுள்ள இன்னொரு பெருந்தீமை யென்னவென்றால், சந்தேகமென்று சொல்லப்படும் அவநம்பிக்கையாகும்; சனங்களுக்குத் தெய்வத்திலே நம்பிக்கையில்லை; வேதாகமங்களிலே நம்பிக்கையில்லை; புராணேதிகாசங்களிலும் பெரியோர் வார்த்தையிலும் நம்பிக்கையில்லை; ஆலய வழிபாடு நித்தியானுஷ்டானம் விரதங்காத்தல் பொங்கல் பூசை மந்திரம் முதலியவைகளிலே நம்பிக்கையில்லை; குரு உபாத்தியாயன் அரசன் என்னுமிவர்களில் விசுவாசமில்லை; முதியோரின் கட்டுப்பாடுகளிலும் கொள்கைகளிலும் இவர்களுக்கு நம்பிக்கையில்லை. பெற்ற தாய் தகப்பனுக்குப் பிள்ளைகளிற் சந்தேகம்; பிள்ளைகளுக்குப் பிதா மாதாக்களிற் சந்தேகம்; பெண்டிரிடத்துப் புருஷனுக்கு நம்பிக்கையில்லை; கணவனிடத்து மனைவிக்கு விசுவாசமில்லை; அண்ணனிடத்துத் தம்பிக்கும் தம்பியிடத்தில் அண்ணனுக்கும் குருவிடத்திற் சிஷனுக்கும் சிஷனிடத்திற் குருவுக்கும் எஜமானனிடத்து வேலைக்காரனுக்கும் வேலைக்காரனிடத்து எஜமானனுக்கும் அரசனிடத்துப் பிரசைகட்கும் குடிகளிடத்து அரசனுக்கும் பரஸ்பரம் நம்பிக்கையில்லை; உற்றாரிற் சந்தேகம்; அயலாரிற் சந்தேகம்; ஆடு மாடுகள் முதலாம் மிருகங்களிலும் மரங் தடிகளிலும் சந்தேகம்; தன்னில் தம்மீதும் தமக்குச் சந்தேகம்; இருவர் ஒருவர் மீது அன்பு பாராட்டி நடந்தால் அதிலே சந்தேகம்; அதிலும் ஆண்பாலார் பெண்பாலரானால் இன்னும் பெருஞ் சந்தேகம்; சோதிடத்திற்சந்தேகம்; வைத்தியத்திற்சந்தேகம்; உலகத்திலுள்ள எல்லாவற்றிலும் சந்தேகம்; இவ்வாறாயின் எவ்வாறு மழை பெய்யும்.

* * *

அல்லாமலும் இக்காலத்தில் எவரைப் பார்த்தாலும் ஆர் கெட்டும் தாம் தாம் வாழவேண்டுமென்ற எண்ணமே தலைப்பட்டுவிட்டது; பொருளாசை அதிகரித்துப் பேராசையாக மாறிவிட்டது; பிள்ளைகட்குரிய பொருளைப் பெற்றார் கவர முயலுகின்றனர்; பெற்றாரிடத்துள்ள பொருளைப் பிள்ளைகள் ஒருவரையொருவர் வஞ்சித்துத் தாம் அபரிக்க முயலுகின்றனர்; அண்ணனுடைய பொருள்பண்டத்தைத் தம்பி தனக்காக்கிக்கொள்ளுகின்றான்; உடன்பிறந்த தம்பிக்கு மாறாகத் தமையன் நீதிஸ்தலமேறி வழக்குப் பேசுகின்றான்; புருஷனை வஞ்சித்துப் பெண்டிர் பணந் தேடுகின்றாள்; மனைவியை வஞ்சித்துக் கணவன் பொருள் காத்து வைக்கிறான்; எஜமானனை வேலைக்காரன் திருடுகின்றான்; வேலைக்காரனை எஜமானன் ஆடு மாடு முதலாம் மிருகம்போல் நடத்துகின்றான்; வீட்டில் எஜமாட்டிகளென்றிருப்போர் தங்களை நம்பியிருக்கும் வேலைக்காரச் சிறுவர் சிறுமியர்கட்கு வயிறார உண்ண உணவு கொடுக்கின்றார்களில்லை; மாறிக் கட்டத் துணி கொடுக்கின்றார்களில்லை; பொறாமை எவரிடத்தும் குடிகொண்டுவிட்டது; அயல்வீட்டு அடுக்களையிற் புகைவதைக் கண்டு தம் மனம் புகைவார் அநேகர் இருக்கின்றார்கள்; தமக்கு நன்மைசெய்து நம்பி நடந்தவனுக்குப் பிறரோடு கூடித் தீமை செய்ய முயலுங் கயவர் பலருளர்; "செழும் பொழிற்வாய் வேம்பன்றோ காக்கை உகக்கும் கனி" என்ற பிரகாரம் ஒருவனிடத்தில் எத்தனை நற்குணங்களிருப்பினும் அத்தனையையும் அலட்சியஞ்செய்து அவனிடத்தில் அரிதாய் ஒரு தீக்குணங் காணப்படின் அதனையே எடுத்து அயலில் தூற்றுவார் பலரைக் காணலாம்; உண்மையாக ஒருவனிடத்துத் தீய செயல் காணப்படாவிடினும் உடனே ஒரு தீமையைக் கற்பித்து அவனைத் தூற்றுவதே பொழுதுபோக்காகவுடையார் பலர் சஞ்சரிக்கின்றனர்; உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவாரும் முன்னொன்று சொல்லிப் பின்பிறிதொன்று பகர்வாரும் எங்குங் காணப்படுவர்; இச்சகம்பேசித் தங்கருமம் பார்ப்பார் இன்னும்பலர்; கோட் சொல்லுங் கசடர் மிகப்பலர்; பொய் வியாச்சியந் தொடர்வாரும் பொய்ச் சான்று சொல்வாரும் பரிதானம் வாங்குவாரும் பத்துக் கைக்கு விகிதமாகவுளர். பொய்யே எல்லாரிடத்தும் எக்கருமத்தும் முற்பட்டு நிற்கின்றது; தெய்வத்துக்கும் பொய்யாய் ஒழுகுகின்றனர்; அரசனிடத்தும் பெரியோரிடத்தும் பெற்ற தாய்தந்தையரிடத்தும் பிள்ளைகளிடத்தும் உற்றார் உறவினரிடத்தும் பொய்சொல்லிப் பிழைக்கத் தலைப்பட்டார் என்னிறத்தோர். இங்ஙனமானால் மழை எங்ஙனம் பெய்யும்.

* * *

புலையுங் கொலையும் அதிகப்பட்டு வருகின்றன; முற்காலத்திலே தாழ்ந்த வருணத்தவரென விருந்தோரே புலாலுண்டு வந்தனர்; வேளாளர் முதலாம் வருணத்தோருட் புலால்புசித்தார் சிலரினுஞ் சிலராக விருந்தனர்; ஆனால் இக்காலத்திலெனிலோ அந்நியதேச சஞ்சாரத்தினாலும் அந்நிய நாகரிகத்தினாலும் சத்தசந்ததிலராகப் புலாலுண்ணுதவர்களும் உண்ணத் தலைப்பட்டுக்கொண்டனர்; முற்காலத்திற் சாதிமக்களென்னும் பிரபுக்களென்று மிருந்தோர் ஒருபோதும் மாமிச போசனஞ் செய்தற் கொருப்பட்டிலர்; ஆலயபரிபாலனம் புராணபடனம் முதலிய சற்கருமங்களைச் செய்வோரும் ஒருபோதும் புலால் புசித்தறியார்கள்; உபாத்தியாயர்கள் நூலாசிரியர் உரையாசிரியர்களும் அப்படியே இருந்தனர்; ஆனால் இக்காலத்திலோ கோயிலதிகாரிகளென இருப்போருட் சிலரும், சமய பிரசாரகர்களும், சாதிமக்கள் பிரபுக்களென்றிருப்போர் சிலரும், புராண படனஞ் செய்வோருட் சிலரும், நிதமும் ஆலய சேவை செய்ய வேண்டியவர்களாகிய வாத்தியகாரரும், சைவ சாதனம் பூண்டு பாதாதிகேச பரியந்தம் விபூதி பூசிக் காஷாயந் தரித்த ஆஷாடபூதிச் சுவாமிகளும், "பரங்கள்" என்று சொல்லப்படும் பண்டாரங்களும், பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தைப் பயிற்ற வேண்டியவர்களும், புலாலுண்ணாமையைப் போதிக்கவேண்டியவர்களுமாகிய உபாத்தியாயர்களும் புலால் புசிக்கின்றார்கள்; மேலே சொல்லப்பட்ட இவர்களும் பெண்பாலாருட் சிறசிலரும் மதுபானத்தையுஞ் செய்கின்றார்கள். முன்னே மீன் விற்பவர்களையும் இறைச்சிக் கடைகளையுங் காண்டல் அரிதாகவிருந்தது; இப்போதோ இவர்களையும் இவைகளையும் இடங்கள் தோறுங் காணலாகும். இனி, கொலையைப்பற்றி ஆராய்வோம். இங்குள்ள அராலி அம்மன்கோவில், உரும்பராய்க் காட்டு வைரவர் கோவில், சுன்னாகம் ஐயனார்கோவில் முதலாம் சில கோவில்களிலே, சைவக்கொள்கைக்கு மாறாக, தெய்வத்தின் மேற் பழியையிட்டுப் பாமரசனங்களும் குருட்டுப் பத்தியுள்ளார் சிலரும் வருடந்தோறும் நூற்றுக்கணக்கான ஆடு கோழிகளையும் வெட்டிக் கொல்லுகின்றார்கள். அறிவுடையோர் இக்கொடூரச் செய்கையைச் சென்று தடுத்தாலும் இப்பாமரர் கேட்கின்றிலர். இவ்வாறாயின மழைபெய்வ தெவ்வாறு.

### புகைரதக்காவலரின் கடமை.

எழுத வாசிக்கத்தெரியாத புகைரதப் பிரயாணிகளின் நன்மைக்காக விதிக்கப்பட்ட ஒரு பிரமாணத்தை இதுவரையும் எவரும் சட்டைசெய்யவில்லை. புகைரதம் ஒரு புகைரதஸ்தானத்தை யடைதலும், காவலன் அந்தப்புகைரத ஸ்தானத்தின் பெயரை உரத்த சத்தத்தில் தெரிவிக்க வேண்டும். எழுத வாசிக்கத்தெரியாத பிரயாணிகளுக்கு இன்ன புகைரதஸ்தானமென்பது அப்பொழுது தெரிய வரும். புகைரத மேலதிகாரி இத்தப்பிரமாணத்தை அநுசரிக்கும்படி காவலருக்குச் சுற்றுநிருபம் விடுத்திருக்கின்றனர்.

### கதிர்காமம்:

கதிர்காமத்தில் இந்தவருஷம் யாத்திரா காலத்தில், செய்யவேண்டிய சுகாதார ஒழுங்குகளை வைத்திய அதிகாரிகள் இப்பொழுதே செய்துவிட்டார்களெனத் தெரிகிறது. இந்த ஸ்தலத்திற்கு ஒவ்வொரு வருஷமும் ஆயிரக்கணக்கானோர் செல்கின்றனர். இந்த வருஷத்தில ஒழுங்குகளெல்லாம் சென்ற வருடங்களைப்போல விருக்குமேயல்லாமல் விசேஷமாயிரா. உற்சவாரம்ப திகதிக்கு இரண்டு கிழமைகளுக்கு முன் கிடசாஸ்திர நிபுணரொருவர், நுளம்பு உற்பத்தியாகு மிடங்களைச் சுத்தஞ்செய்யும் வேலையை மேற்பார்வை செய்தற்கு அங்கே செல்வர். யாத்திராகாலத்தில் ஒரு வைத்தியரும் இரண்டு சுகாதாரப் பரிசோதகர்களும் அங்கே அனுப்பப் படுவார்கள்.

### இலங்கைச் செவிலித்தாய்மாருக்கு விசேஷ பயிற்சி.

இலங்கையிலுள்ள செவிலித் தாய்மாரை இங்கிலாந்திற்கனுப்பி அங்கேயுள்ள வைத்தியசாலைகளில் இவர்களைப் பயிற்றும் விஷயமாக இராசமாளிகையிலிருந்து அரசினருக்கு ஓர் செய்தி இப்பொழுது அனுப்பப்பட்டிருக்கிறது. அதில் இங்கிலாந்திலுள்ள நாலு வைத்தியசாலைகள் இவர்களைப் பயிற்றுவதற்கு ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கின்றனவெனக் கூறப்பட்டிருக்கிறது. 33 செவிலித்தாய்மார் இங்கிலாந்து சென்று பயிலவிரும்பி விண்ணப்பங்கள் அனுப்பியிருந்தார்கள். இவர்களில் ஆறுபேர் மாத்திரம் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இருவர் வேறு வியாயம்பற்றியும் ஒருவர் சுகவீனம் காரணமாகவும் மூன்றுபேர் தாங்களனுப்பிய விண்ணப்பங்களை வாங்கிக்கொண்டார்கள். இன்னும் மூவர் மேலதிகமாக இப்பொழுது தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் இங்கிலாந்தில் பயின்று கொள்ளத்தக்க தேகநிலைமையை யுடையவர்கள். இந்த வருஷத்து கடைக்கூற்றில் இவர்கள் இங்கிலாந்திற்கு அனுப்பப்படுவார்கள்.

### விலை உயர்ந்த நீலக்கல்.

சில வருஷங்களுக்கு முன்னர் சப்புரகமுவவிலுள்ள மிஸ்டர் ஏ. வி. அட்டிகாலி என்பவர் ரத்னங்கள் வெட்டி எடுக்கும்பொழுது ஒரு பெரிய நீலக்கல் கிடைத்தது. அதைச் செதுக்கி எடுத்தபோது 35 ரூபாய் நிறை இருந்தது. அதை வாங்கக்கூடியவர் இலங்கையில் எவருமில்லை; அது லக்ஷக் கணக்கில் விலை மதிக்கப்பட்டது. ஆகவே மிஸ்டர் அட்டிகாலி அதைப் பாரிஸுக்கு விற்பனைக்கு அனுப்பியுள்ளார். ஆப்கன் அரசர் பாரிஸுக்குப் போயிருந்தபோது அதை வாங்குமுயன்ருராம். ஆனால் உடையவர் விரும்பிய தொகை கொடுக்க இஷ்டப்படாததால், அதை அவர் வாங்கவில்லையாம். அந்தக்கல் தேத்தண்ணீர்த்தட்டுப்போல் பெரியதாயிருக்கிறதாம். அதைச் சிறு துண்டுகளாக வெட்டினுல் பிரகாசமும் விலையும் குறைந்து போகுமென்று பயந்து அதை வெட்டாமல் வைத்திருக்கிருராம்.

---

### மதம்பிடித்த யானை.

சென்ற ஜூன்மீ 4-ம்வ நாவலப்பிட்டிப் புகைரதஸ்தானத்திலிருந்து பாரிய யந்திரங்கள் ஐந்து யானைகளில் ஏற்றி "கெல்வி ரூராப்" என்னும் தோட்டப் பகுதிகளுக்குக் கொண்டுபோகப்பட்டன. யானைப்பாகர்களும் யானைகளும் திரும்பி வரும்பொழுது எலவே இருவரைக் கொன்ற யானையொன்று ஒரு யானைப் பாகனைத் தாக்கியவுடன் யானை மீதிருந்த யானைப்பாகன் ஓர் ஆற்றில்விழுந்து தப்பிவிட்டான். அந்தயானை மற்ரெரு யானையையும் அதன் பாகனையும் தாக்கியது. உடனே பாகன் கீழே விழுதலும் அவனை அந்த மதம்பிடித்த யானை காலால் மிதித்துக் கொண்டிருக்கும் பொழுது இன்னுமொருயானை அதைத் தூரத்திவிட்டுப் பாகனைத் தப்புவித்தது. அப்பாகன் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அங்கே ஆபத்தான நிலையிலிருக்கிறதாகத் தெரிகிறது. அரசினர் அந்த மதம்பிடித்த யானையைக் கைப்பற்றிக் கொண்டார்கள். மற்ற யானைகளைச் சொந்தக்காரர் அழைத்துச் சென்ருர்கள். அந்த மதம்பிடித்த யானையை அடக்குவது மிகவும் கஷ்டமாயிருந்தது. அரசினரால் கைப்பற்றப்பட்ட மதம்பிடித்த யானைகளுள் அதிக மதம்பிடித்த யானையொன்று அந்த மதயானையின் கர்வத்தை அடக்கியது.

---

### பிரயாணஞ்செய்வதற்கு வசதியான மோட்டர் வண்டி.

கௌரவ மிஸ்ரர் W. M. றகிமான் அவர்கள் கருத்திற்கிசைய இலங்கையில் இப்பொழுது ஒரு மோட்டர் வண்டி செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த மோட்டர் வண்டி 1000 மைல் பிரயாணம் செய்திருக்கின்றது அதில் 13 பேர் படுத்து நித்திரைசெய்ய இடமுண்டு 15 பேர் வடமாகாணத்திற்கு அதில் பிரயாணஞ் செய்து திரும்பியிருக்கிருர்கள். இந்த மோட்டரைச் செய்து முடிக்க ஐந்துமாதங்கள் சென்றன. யந்திரங்களின் விலையோடு இன்னும் மேலதிகமாக ரூபா. 6000 அதற்குச் செலவாய் விட்டது. புகைரதத்திலுள்ள போசனம் செய்தற்காகிய வண்டிகளில் இருக்கும் படுக்கைகளைப் போல அதிலும் ஐந்து வசதியான படுக்கைகள் உண்டு. குளிப்பதற்கும் மலசலம் கழிப்பதற்கும் அறைகளும், மோட்டரின் ஒரு அந்தத்தில் சமையல் செய்வதற்கு ஓர் அறையும் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மேசையும் 'கிறமபோன்' எனப்படும் பாடும் யந்திரமும் ஒவ்வொரு தேவைக்குரிய பெட்டிகளும் மின்சார விளக்குகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மழையாவது தூளம்பாவது உட்செல்ல இடமில்லை. மோட்டரின் கூடாரத்திற்கு மேலே இன்னுமொரு கூடாரம் வேண்டிய பொழுது அமைத்துக் கொள்ளலாம். அதில் ஏழுபேர் நித்திரை செய்யவும், சிலர் உட்கார்ந்து கொள்ளவும் வசதியுண்டு

---

### பேசும் யந்திரம்.

பேசுகிற யந்திரம் ஒன்று ரெமிங்டன் ஆயுத கம்பனியால் நூதனமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. அது கடைகளில் ஜனங்களுக்குச் சாமான்களை எடுத்துக் கொடுக்கவும் சொல்லிக்கொடுத்த வார்த்தைகளைத் திரும்பச் சொல்லவும் செய்கிறது. கிட்டத்தட்ட மனிதரைப் போலவே வேலைசெய்கிறது. இந்தமாதிரி யந்திரங்கள்செய்து விற்பனை செய்வதற்காக மூன்று கம்பெனிகள் ஒன்றுசேர்ந்து 25,000,000, டாலர் மூலதனத்துடன் ஒரு புதிய வியாபார ஸ்தாபனத்தை ஆரம்பித்திருக்கிருர்கள்.

### புதுக்கோட்டை மகாராஜா.

இவருடைய பிரேதம் லண்டனிலுள்ள 'கோல்டேர்ஸ் கிறீன்' என்னுமிடத்தில் தகனஞ்செய்யப்பட்டது. தகனக்கிரியைகள் சென்னையிலுள்ள இரண்டு பிராமணோத்தமரால் செய்யப்பட்டன. கிரியைகள் நடக்கும்பொழுது இராணியும் அவரது மகன் மார்த்தாண்ட என்னும் இளவரசரும் இன்னுஞ்சில நண்பரும் சமுகமாயிருந்தனர். கப்புர்தலாவின் மகாராஜாவும் இன்னுஞ் சிலரும் மாலைகள் அனுப்பியிருந்தனர். அவரது சாம்பர் வழக்கமாகவுள்ள கிரியைகள் செய்வதற்காகப் புதுக்கோட்டைக்கு அனுப்பப்படுமெனத் தெரிகிறது.

---

### இமயமலையில் வருமுயற்சி.

இட்டாலி தேசத்துப் பிரபுவாகிய அப்ஸ்போலெட்டோ, இன்று ஸிம்லாவுக்கு வந்து ராஜப்பிரதிநிதி மாளிகையில் தங்கியிருக்கிருர். இமயமலையில் ஷாக்ஸ் காம் நதிப்பிரதேசத்தைப் பரிசிலனை செய்வதே அவருடைய முக்கிய நோக்கமாகும். அதுவிஷயமாக அவர் இந்தியா அளவைப்பகுதியைச் சேர்ந்த மேஜர் மேஸனுடன் இன்றுகாலை பேசிக்கொண்டிருந்தார். அவர் இந்தமாதமே மலைக் கணவாய்களைக் கடந்துபோக வேண்டியிருக்குமாம், பரிசிலனைக்கான முன்வேலைகளைக் கோடைகாலத்தில் கவனிக்கவேண்டியிருக்குமாம்.

---

### ஒரு குற்றவாளிக்கு 58 கொலைத்தண்டனைகள்.

ஸேர்பியாவில் பிரபல துஷ்டர்களான இருவருக்கு, அவர்கள் செய்த கொலைக் குற்றங்களுக்காகத் தனித்தனியே 58 மரணதண்டனைகளும், மொத்தத்தில் 180 வருஷம் சிறைவாசமும் விதிக்கப்பட்டன அவர்கள் 1924-ம்ஆு சிறைவாசம் அடைந்து, பின்பு சிறைக்கூட்டத்தினின்றுந் தப்பியோடிப் பல அக்கிரமங்களும் கொலைகளும் செய்தார்களாம். அவர்கள் பிடிக்கப்பட்டதும் ஸேர்பிய சட்டப்படி ஒவ்வொரு குற்றத்திற்கும் தனித்தனி தண்டனை விதிக்கப்பட்டது. இதனுலேதான் மரணதண்டனைகளும் சிறைவாசமும் இவ்வளவு அதிகமாயின.

---

### ஜப்பானிய ஸ்திரீகளின் கூந்தல்.

ஒரு ஜப்பானிய ஸ்திரீ தன் கூந்தலைக் கட்டிக்கொண்டிருக்கும் விதத்தைக் கொண்டு அவள் விவாகஞ் செய்து கொள்ள இச்சிக்கும் இளம்பெண்ணென்றும், அல்லது நாயகன் மரணத்தினுல் ஆருத்துயரத்தில் ஆழ்ந்திருக்கும் விதவையோவென்றும் அல்லது தக்க புருஷன் அகப்படும் பக்ஷத்தில் அத்துயரத்தை மாற்றிக்கொள்ளத் தேடும் கைம்பெண்ணென்றும் பிறர் அறிந்து கொள்ளலாம், வாலிபப்பெண்கள் மூன்மயிரை விசிறிபோலும் வண்ணுத்திப் பூச்சிபோலும் வாரிமுடித்து, அதில் வெள்ளி ஆபரணங்களையும் அல்லது வர்ணமிட்ட வேறு நகைகளையும் சொருகிக் கொள்ளுவார்கள். மறு புருஷரை மணந்துகொள்ள விரும்பும் விதவைகள் தங்கள் பின்மயிரை ஆமை ஓடுகளால் செய்யப்பட்ட ஊசிகளால் குத்திக் கட்டிக்கொண்டிருப்பார்கள். காலஞ்சென்ற தங்கள் கணவர்களுக்கு எக்காலும் பிரமாணிக்கமாயிருக்க விரும்பும் விதவைகளோ தங்கள் தலைமயிரைக் கத்தரித்துப்போட்டு அதில் யாதொரு நகையும் தரித்துக்கொள்ள மாட்டார்கள்.

---

### வைரங்களின் அற்புத சக்தி.

"ஸண்டே எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் ஸ்ரீ வி. ஆர். கார்திகர் எழுதுவதின் சாராம்சமாவது:—

இந்தியாவிலும் பர்மாவிலும், அதிசயமான அற்புதசக்தி வாய்ந்த வைரங்கள் இன்றும் ஏராளமாயிருக்கின்றன. பூரணசந்திரன் பிரகாசிக்கும்போது கண்ணீர்விட்டழும் வைரங்கள் உண்டு. இவை விடும் நீர் மிகவும் தூயதாயிருக்கும். சர்ப்பத்தின் சிரசிலிருந்து எடுத்த மூக்காக்கள், விஷம்போக்கும் சக்தியுள்ள இரத்தினங்கள், சர்ம ரோய்களைப் போக்கும் மரகதங்கள் முதலியவைகளும் இருக்கின்றன.

சில காலைக்குமுன் தஞ்சாவூர் அரண்மனையைச் சேர்ந்த கண்டநாமோமான்னை நச் சென்னை லௌகார்பேட்டை வியாபாரி ஒருவர் வாங்கினர். அதைத் தம் மருமகளுக்குக் கொடுக்காண்ணிப் பதிப்பிக்கும்பொருட்டு அனுப்பினர். நகைவியாபாரி அந்த நாரத்தின் பதக்கத்திலிருந்த வைரம் மிகவும் அதிசயமானதென்று கண்டு அதைத் தனியாக மோதிரத்தில் பதிப்பிக்கச் சொன்னர். பின்னர் அந்த வைரத்தை வைத்திருந்து பரிசோதித்ததில் அது அடிக்கடி நிறம் மாறுவதாகத் தெரிந்தது. பகலில் அது ரோஜாநிறமாய்க் காணப்பட்டது. ஆனல் வெயிலில் கொண்டு வந்தும் நல்ல நீல நிறமாக மாறிற்று. இருட்டறையில் கொண்டுபோனபோது அது பிரகாசிமையளிக்கவில்லை பின்னர் அது பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டது. சாயங்காலம் பெட்டியைத் திறந்தபோது பெட்டிமுழுதும் நல்ல நீல ஒளி அடர்ந்ததுபோல் பிரகாசமாய் விளங்கிற்று. வைரத்தைக் கையிலெடுத்தபோது அது ஈரமாயிருந்தது. அது வைத்திருந்த பஞ்சு சொட்ட நனைந்திருந்தது சந்திரன் அஸ்தமித்ததும் அதனுடைய ஒளியும் மங்கிற்று.

### யானைமுத்து.

இலங்கையில் அதிசயமான முத்து ஒன்று இருக்கிறது. "நான் இந்த முத்தைக் கண்ணுல் காணும் வரையில், கதைகளில் அதைப் பற்றிச் சொல்லப்படுவனவெல்லாம் வெறுங் கற்பனை என்று எண்ணியிருந்தேன்." என்று கொழும்பு கண்காட்சிச் சாலைத்தலைவர் டாக்டர் ஜோசப் பியர்ஸன் சொல்கிருர். இது தங்க நிறங்கலந்த வெண்முத்து. சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு உற்பத்தியானதாகக் கருதப்படுகிறது. அணுதர்சினிக் கண்ணுடியால் பார்த்தால் இது தந்தத்தினுல் ஆனதென்று தெரியவருகிறது. அத்துடன் கண்ணுடி போன்ற அதன் மேற்புறத்தை நன்ருய் உற்றுப் பார்த்தால் உள்ளே வெள்ளையானை ஒன்றின் உருவம் நன்கு தெரிகின்றது.

அதிசய சக்தியுள்ள பல முத்துக்களைப்பற்றி வராகமிஹிரர் எழுதியிருக்கிருர். மழைகாலத்தில் முதன் முதலில் இடியும் மின்னலுமாய் மழைபொழியத் தொடங்கும் போது மேகம் வெடித்து அதிலிருந்து முத்து விழுமாம். அது மாதுளை முத்தின் அளவாயிருக்குமாம், மின்னலைப்போல் ஒளி வீசுமாம். இம்முத்தை வைத்திருப்பவர்கள்மீது இடி ஒருபோதும் விழாதாம்.

### நாகமணி.

சர்ப்பத்தின் தலையிலுள்ள மணி இரவில் ஒளி வீசுமென்றும் அம்மணியின் பிரகாசத்தினுல் கவரப்பட்டுவரும் தேரை, எலி முதலியவைகளைப் பாம்பு உண்டு உயிர் வாழ்கிறதென்றும் பரம்பரையாகச் சொல்லப்பட்டு வருகின்றன. பாம்பு கோபங்கொள்ளும்போது இந்த மணி உருகி விஷமாகி விடுமாம். ஆகவே இத்தகைய மணிகள் அகப்படுதல் மிகவும் அருமை. ஆனல் பூனுஜில்லாவில் பணக்கார ஜமீன்தார் ஒருவரிடம் நாகமணி ஒன்றிருக்கிறதாம். பாம்பின் விஷத்தை இறக்கும் சக்தி இதற்குண்டாம். பாம்புகடித்தவாயில் இம்மணியை வைத்து விட்டால் விஷம் உள்ளவரையில் அஃது அங்கு ஒட்டிக்கொண்டிருக்குமாம், விஷமெல்லாம் உறிஞ்சப்பட்டதும் கீழே விழுந்துவிடுமாம்.

வங்காள சட்டசபை அங்கத்தினரான மிஸ்டர் மொரிஸேனிடம் இரத்தினக்கல் ஒன்றிருக்கிறது. இதன் பளபளப்பான மேற்புறத்துக்கடியில் வெள்ளைத் தலைப்பாகையும் வெள்ளை உடைகளும் தரித்த கறுப்புமனிதனின் வடிவம் தோன்றுகிறதாம். அங்கே அவ்வுருவம் எப்படி ஏற்பட்டதென்பது கண்டுபிடிக்க முடியாத மர்மமேயாகும்.

### மாகதக் கிண்ணம்.

பர்மாவின் அரசராயிருந்த தீபா என்பவரிடம் இரத்தினக் கற்கள் பதித்த ஒருசோடிக் கடுக்கன்கள் இருந்தன. மேற்படி கற்களில் அழகான தாமரை மலர்களின் வடிவங்கள் காணப்பட்டன. விஷம் இறக்குஞ் சக்தி அக்கடுக்கன்களுக்கு உண்டென்று கருதப்பட்டது. மேற்படி அரசர் தம் மரணதினத்தன்று தம்மிடம் பக்தியுடனிருந்த ஒரு வேலைக்காரனுக்கு அவற்றைக் கொடுத்தாராம். அப்புறம் அவை என்னவாயினவென்று தெரியவில்லை.

பத்தி மகாராஜாவிடம் அழகிய பச்சை நிறமுள்ள ஒரு மாகதக்கிண்ணம் இருக்கிறது. இக்கிண்ணத்தில் தண்ணீர் நிரப்பிச் சூரிய ஒளியில் மூன்றுமணிநேரம் வைத்திருந்து உபயோகித்தால் சர்ம ரோகங்கள் நீங்குகின்றனவாம். பம்பாய் மாகாணத்தில் மற்ரெரு சமஸ்தானுதிபதி, உயர்ந்த முழுநீலக் கற்களில் செதுக்கிய கல்லுயமும் குழவியும் வைத்திருக்கிருர். பித்த சோகை ரோகத்துக்கு இவற்றில் அரைத்த மருந்தைக் கொடுத்துக் குணம் செய்கிருர். திருவாங்கூர் சமஸ்தானத்தில் இரத்தினக் கல்லாலான கணேச விக்கிரகம் ஒன்றும், நீலக்கல்லில் செதுக்கிய விஷ்ணு சிலை ஒன்றும் இருக்கின்றன. இவை உற்சவ காலங்களில் மட்டும் எடுக்கப்பட்டு மற்றக் காலங்களில் இரகசிய அரங்கங்களில் பத்திரப்படுத்தி வைக்கப்படுகின்றன. —"நவசக்தி"

---

### சைவசமயமும் கொல்லாவிரதமும்.

(முற்ருெடர்.)

#### வேள்வியின் விநோதமும் தன்னல இச்சையும்.

பலிகொடுப்பதற்காக வருடந்தோறும் அநேக ஆடுகளையும், கோழிகளையும் வளர்க்கின்றீர்கள் அவைகளுக்குத் தவிடு, பிண்ணுக்குச், சோறு, குழைகள முதலிய தின்களைக் கொடுத்துக் கொழுக்கப் பண்ணுகின்றீர்கள் ஏதாவது நோய் வந்துவிட்டால், வெகு பொருட்செலவோடும் கவலையோடும் தீர்க்கப் பார்க்கின்றீர்கள் கள்ளத்தனமாய் எவரேனும் கொண்டு போய்விட்டால், பெரும் பிரயாசைகொண்டு சாத்திரம்கேட்டும் மைபோட்டும் பார்த்துப் பிடிக்கின்றீர்கள். மணிகள்கட்டி, வெண்டையங்கள்கட்டி, சதங்கைகள்கட்டி, விசித்திரமான குஞ்சங்கள்கட்டி வடிவுபார்க்கின்றீர்கள் சில சமயங்களில் கேட்போருக்குப் பிள்ளைகளைப்போல் வளர்க்கிருேமென்றுஞ் சொல்லுகிறீர்கள் இவையெல்லாம் மனிதரிடத்தில் இயற்கையாயமைந்துள்ள செந்நெறியைக் காட்டுகின்றனதான் என்ருலும், எத்தனை செய்து என்ன? "ருத்திரர்க்கு" சத்திவைக்கும் நாள் வந்துவிட்டால், ஆ! உங்கள் அன்பும், ஆதரவும், தயவும், தாட்சணியமும் பசுக்களை யேசித்த புலிகள் போலவும், எலிகளை நேசித்த பூனைகள்போலவும், பாம்புகளை நேசித்த கருடன்களைப்போலவுமே முடிகின்றன.

இதுமட்டுமா? பலிகொடுப்பதற்கு முன்னதாகவே ஒவ்வொரு ஆட்டிற்கும் செலவழிந்த கணக்குகளைக் குறித்து 10 ரூபாய்க்கு விற்கும்; 15 ரூபாய்க்கு விற்கும்; 20 ரூபாய்க்கு விற்கும்; 25 ரூபாய் கேட்கப்பட்டிருக்கின்றது. 30 ரூபாய்க்கு மதிப்பாகின்றது என்று அதனதன் தோல், தலை, கால் முதலிய உறுப்புக்களைப் பிரித்துப்பார்த்து விலை மதிப்புக் கொள்ளுகின்றீர்கள். எனக்கு 2ரூபாய்க்குத் தந்துவிடு என்பாரும், 1 ரூபாய்க்கு அனுப்பிவை என்பாரும், வத்தல்போட 5 ரூபாய்க்கு வேண்டுமென்பாரும், நான் சொல்லிவைத்ததை மறந்துவிடாதே என்பாரும், என்னவிலைவந்தாலும் தலையை எனக்குத் தந்துவிடு என்பாரும்; தோலுக்கு முற்பணங்கட்டுவாரும், கால்களுக்கு விலை பேசுவாருமாய் உயிருக்கும்பொழுது பேசாதும் மனதாலும் அடித்துப்பிரித்து ருசிபார்த்துக்கொள்ளுகின்றீர்கள்

இனி, வீட்டுப் பெண்கள் யாது விட்டுவிட்டார்களா? இல்லை இல்லை அவர்களும் ஆடு கோழிகளைப் பலிக்களத்திற்கு அனுப்பிவிட்டு மிகவும் ஆரவாரத்துடன் சதி மசாலைகள் பக்குவப்படுத்தி வைத்துக்கொண்டு நடாது சென்ற ஆடும் கோழியும் குடலைக்குள் புகுந்துவருவது எப்போ எப்போவென்று காத்துக்கொண்டிருக்கின்றனர். ஐயோ! இன்னும் நடாக்களுக்குப் பலிக்களத்தில் நடக்கும் நிலைமையோ? அதன் தலையில் கயிறுகட்டி முன்னேயொருவர் இழுத்துப்பிடிக்கப் பின்னங்கால்களைப் பின்னெருவரிழுக்க நடுவேநிற்கும் ஆவேசங்கொண்ட ஒருவனுமானால் கரகரவென வெட்டித் துண்டிக்கப்படுகின்றதே; தோலுரிக்கச் சுளை விழுங்குவதுபோல் உயிரிருக்கத் தின்னுகின்றீர்கள், அங்ஙமுழுவதும் பிரித்து விலைமதித்துக்கொள்ளும் நீங்கள், தேவதைகளுக்குப் பலியாய்க்கொடுப்பது எதை? கொடுப்பது எதை? யாதொன்றுமில்லை; உயிருடன் நீங்களே புசித்துவிடுகின்றீர்கள். இதிலிருந்து உயிர்ப்பலி கொடுப்பது தேவதைகட்கல்லவென்பதும், உங்கள் உடல்நலத்திற்கேயாமென்பதும் வெள்ளிடை மலையென விளங்கிக் கிடக்கின்றன,

தாரண மனுதர்களால் கைக்கொள்ளப்படும் எவ்விதமான விதிவிலக்குகளும் கற்றறிந்தோரால் தெரிவிக்கப்படுகின்றன. கல்வியுடையோர் சாத்திரங்களிலிருந்து எடுக்கின்றர்கள். சாத்திரங்கள் வேதம் என்னும் பொக்கிஷத்திலிருந்து விரிவுபெற்றிருக்கின்றன; இங்ஙனமாக, வேதங்களும், சாத்திரங்களும், தெரிந்தோரும் கலைவல்லோரும் வேண்டாமென்று விலக்கும் இக்கொடிய பலித்தொழிலை நீங்கள் விடுபோலச் செய்வதற்கு ஆதாரம் ஏதுமுண்டா? இல்லையேல், சாத்திர சம்மதத்தோடில்லாத உங்கள் கிரியைகள் பயன்தராவே? இந்தப் பாவத்தொழிலை விட்டுவிடுங்களென்று அநேகர் அநேகவிதமாகக் கூறினும் நீங்கள் அடாத்தாய்ப் பலிகொடுப்பதானது உங்கள் சுயநல இச்சைக்காகத்தானென்பதை மேலும் மேலும் பெலப்படுத்துகிறது.

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூனுண்பா னெங்ஙன மாளு மருள். (திருவள்ளுவர்)

என்றபடி தன் சரீரத்தைப் போஷித்தற்பொருட்டுப் பிறிதோருயிரை வதைத்துண்பார்க்கு அருள்வந்து கைகூடுவது எங்ஙனம்? அருள் கிடைக்கமாட்டாது ஆகையால்,

"இந்நோய் நமக்குண்டென் றெண்ணுதே யெவ்வுயிரு, முன்னேவக் கொன்றுண்ணு மூர்க்கர்தா—மெந்நோயும், பண்ணைப் பகைரங்க பாவிகளிற் பாவிகளென், றெண்ணப்படுவார் நிலைசந்த" (இதிகாசம்.)

என்பதுபோல் பிறவுயிர்களுக்குண்டாகுந் துன்பங்களைத் தனதாகவெண்ணி இரங்காது சாதகைக்கும், சரீரபோஷணைக்குமாய்க் கொல்லும் மூர்க்கரைப் பல துன்பங்களுஞ் சூழ்ந்து வருத்துகின்ற சோமய காலத்தில் வீழ்த்திப் பாவிகளிலும் பாவிகளாய் மதிக்கப்படுவர். அன்றியும், ஓடியாடித்திரியும் உயிர்களைப் பிடித்துப் பலிகொடுத்து வேள்வி நடத்துவதால் உங்களுக்காவது தேசத்திற்காவது கிடைத்திருக்கும் நன்மைப்பகுதிகள் எவை? யாதொன்றுமில்லை. அப்போதைக்கப்போது குசிபார்த்ததே மிச்சமாகின்றது இவைகளை விட்டுவிட்டு நாய், பூனை, கழுதை, குதிரை, காகம் முதலிய ஜெந்துக்களைப் பலிகொடுக்கப் பார்ப்போமா? இவைகள் விசேஷமாய் எங்கும் கிடைக்கக்கூடியவைகள்தானே? அப்படிச் செய்யமாட்டீர்கள். தேவதைகள் விரும்பினும் நீங்கள் உடன்படமாட்டீர்கள். சந்ததிகளோ? நீங்கள் தின்று பழகியிருக்கதல்லாவோ என்னபாடுபட்டும் பலிகொடுப்பீர்கள்? இவ்விதம் பாவத்தோடுகூடிய காமிய கர்மங்கள் செய்யப் பழகிவிருேலயே உலகத்தில் பலவிதமான மாறுதல்களும், போராட்டங்களும் ஏற்பட்டிருப்பதற்குக் காரணமென்னலாம். காலமறிந்து உதவி செய்து வந்த வருண பகவானும் தன் கடமையைச் செய்யாது வாளாவிருப்பதும் இதனுற்றுன் போலும். (வரும்)

நா. க. தனபாலன்
மாணிப்பாய்

## அம்மிமிதித்தல்; (கல்மிதித்தலே.)

—:0:—

ள் மருடாமம் புனைந்து எழுதப்பட்ட 91.“ இலக்க இந்துசாதனத்தில், விவாகத்தில் அம்மியை மாத்திரம் வைப்பதன்றி, குழவியையும் சேர்த்து வைத்தலாகாதென்பதே துணிபென முடிபுசெய்து எழுதப்பட்ட விஷயத்திற்கு, குழவியுஞ் சேர்த்துவைத்தலே முறையெனச் சொல்லலாம்.

உலகம் சிவம், சக்தி இரண்டினாலும் தொழிற்படுகின்றதேயன்றி, சிவம் இன்றிச் சக்தியால் தொழிற்படவில்லை. உலகின்கண்ணுள்ள வஸ்துக்களில், அநேகவஸ்துக்கள் தனிமையினுக்களாகவும், அநேகவஸ்துக்கள் இரண்டு சேர்ந்தும், பலசேர்ந்தும் இருக்கின்றன. ஆதலால், எவ்வெவ்விஷயங்கட்கு எவ்வெவை வெவிதஞ் சேர்த்தலழகோ? அவ்விதஞ் சேர்த்தலழகான திச் சம்பந்தமுள்ள வஸ்துக்களைப் பிரித்துவிட்டுச் (சம்பந்தம்) செய்தலழகாகாது.

கல்யாண மண்டபம் அழகு செய்வதற்காக அநேகர் மணவறை, அரசாணிப்பீடம், அரசாணிப்பாலை, பாலிகைச்சட்டி, ஓமகுண்டம், விசித்திர விழக்குகள், கண்ணடி, விரிப்பு, ரத்தினக்கம்பளம், முதலிய அநேக உபகரணங்களை நன்குபொருத்தமாக அமைத்து வைத்திருக்கின்றனரே. அவர்கள் இவ்வம்மியாகவோர் கருங்கல்லை விசித்திராலங்காரமாக அமைத்துவைத்தல் முறையெனக் கொள்ளாது அம்மியை ஏன் கொணர்ந்து வைத்தல் வேண்டும்.

அம்மியோடு சம்பந்தப்பட்ட கருவிக்கு ஆன்றோர் வேறுபெயரிடாது, குழவி! எனப் பெயரிட்ட காரணம் என்ன? அஃது (விவாகத்தில்) ஓர் கிரியையில் குழந்தையாகப் பாவிக்கப்படுதலாலல்லவா? குழவிக்குக் கிரியை ஏற்படாவிட்டாலும், விவாகமண்டபத்தில் அதுவும் வஸ்திரம், மஞ்சள், குங்குமம், புஷ்பம் முதலிய அலங்காரங்களோடு சோபித்தல் சாஸ்திரத்திற்கு விரோதமாகாதென் றுகருதுகிறேன்.

குழந்தையைத் தனியவிட்டுத் தாயானவள் விவாகத்தில் தனது கடமைக்குப் போதல் முறையல்ல, ஆதலால் குழந்தையையுமழைத்துப்போதலே முறையாகும். அதுபோல் விவாகத்தில் அம்மியோடு குழவியையுஞ் சேர்த்து வைத்தல் விலக்கல்லவென்பது தோன்றுகிறது. விவாக காலத்தில், தாயாகிய அம்மியாகுஞ் சந்நிதானத்தில், மணப்பெண்ணே! நீ இந்த அம்மியின்மேல் ஏறு. இதனைப்போலத் தயிரிய சிந்தையோடு, மனத்துணிவின்றியவளாய் இருக்கவேண்டும் என்பதற்கு ஓர் சான்றாக அக்குழவி இருக்கலாமென்பதே மறைபொருள்.

கல்யாண மண்டபத்தில் அம்மியோடு கூடக் குழவி இருக்க இடமில்லாமலோ? அல்லது அதனால் அழகுக்குறைவோ? அல்லது பிரகடனத்திற்குத்தடையோ? அல்லது பெண்ணின் காலை அம்மியில் அக்கிவைப்பதற்கு முடியாதோ? இவையோ? இன்னும் பிறவோ? குழவிவைப்பதற்குத் தடைசெய்வன.

“சேரிடமறிந்துசேர்” ஔவை.

.....................................................

.....................................................

பும்சவனம் என்னும் கிரியைக்கு அம்மி குழவி இரண்டும் வேண்டியிருப்பதால், விவாகத்தனும் குழவிக்குக் கிரியாசம்பந்தமில்லாவிட்டாலும் குழவி இருக்கலாம் என்பதே யானறிந்த கொள்கை.

.....................................................

.....................................................

விவாகத்தில் அம்மியோடு குழவிவைத்தலாகாதெனவும், அம்மி மாத்திரந்தான் வைக்கப்படவேண்டுமெனவும், ஓர் நூலிலுஞ் சொல்லப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால் அம்மியும் குழவியுஞ் சேர்த்துவைப்பதே, கூறுமற் கூறப்பட்டது.

இலங்கையிற் பெரும்பான்மையும் விவாக மண்டபத்தில் அம்மியோடுகூடக் குழவியுஞ் சேர்த்துவைத்தே கிரியை நடத்துகிறதாக ஆன்றோரசேர் சொல்லக்கேட்கிறேன். அதனால் பழமைபோல் நடந்துகொள்வதே நருமநூற்றுணிபு. விதிவிலக்குகளை ஆராய்ந்தே ஆன்றோர் ஆசாரத்தில் வைத்திருக்கிறார்கள்.

இங்ஙனம்,
சோ. ஸ்ரீநிவாசசர்மா,
முகத்துவாரம், கொழும்பு.

## மாடுகளின் சுழிகள்.

நமது தேசத்தில் மாடு வாங்குபவர்கள் சுழிகளில் நல்ல குடையான முன்னவைகளாகப் பார்த்து வாங்குவது வழக்கமாக இருக்கிறது. இவ்வித சுழிகளில் கெட்டவைகளும் உண்டு நல்லவைகளும் உண்டு. அவ்வித கெட்ட சுழியுடைய மாடுகளைப் பொதுவாய் ஜனங்கள் நீக்கிவிடுகின்றனர் என்று கூறிவிட்டுப்பின்னர் மாடுகளின் சுழிகளைப்பற்றி “இந்திய விவசாயி” கூறுகிறது:—

### தாவணிச் சுழி.

இச்சுழி மாட்டின் கழுத்தில் இரண்டு கால்களுக்கும் மத்தியில் இருக்கக்கூடியது. இத்தகைசுழியுள்ள மாடு தொழுவத்தில் இருந்தால் மாடுகள் விருத்தியடையும். அல்லது மாட்டின் சொந்தக்காரன் அதிக மாடுகளைச் சேர்ப்பான்.

### இரட்டைத் தவணி.

மாட்டின் மார்பில் இருபக்கமும் இரண்டு பினைவு காணுமாகிச் சுழி ஏற்பட்டிருக்கும். இது நல்ல சுழி. இச்சுழி ஒன்றுமட்டும் இருந்தால் அதற்கு ஒற்றைத் தவணைப் பெயர். அது கெட்ட சுழி; ஒற்றைத் தவண்சுழியுள்ள மாடு வாங்கினவன் தொழுவத்திலுள்ள மற்றமாடுகள் அழிவதுமல்லாமல், எஜமானனும் உயிர் துறப்பான்.

### பாவிகம் சுழி.

இது நெற்றியில் இருப்பது. இச்சுழியுள்ள மாட்டை யுடையவன் பிரமசாரியாக இருந்தால் சீக்கிரம் மணம்புரிந்து கொள்வான். மாட்டை வாங்குவதற்கு முன்னமே மணந்திருந்தால் தன்மனைவியை யிழந்து, மற்றொருத்தியை விவாகம் புரிந்துகொள்வான்.

### கோபுரச் சுழி.

திமிலுக்கு முன்பக்கமாகிலும் பின்பக்கமாகிலும் படிந்திருக்கும் இது நல்லசுழி.

### நீர்ச்சுழி.

முதுகில் நீர்த்தாரைக்கு நேர்மேலாக இருப்பது. இதைப்பற்றி ‘நீரானாலும் ஆகும்; ஆறானாலும் ஆகும்’ எனப் பழமொழியும் வழங்குகின்றது. கொஞ்சம் கவிமண் எடுத்து இச்சுழியில் தேய்த்தால் நீர்விடுமாம்.

### தட்டுச் சுழி.

இது முதுகுபக்கத்தில் சப்பைகளின் நடுவில் இருப்பது. இது எஜமானின காரியங்களைக் கெடுத்துவரும்.

### பெண்டிழந்தான் சுழி.

இனவால் அமக்கும் பக்கத்தில், குண்டிக்காய்க்குமேல் உளது. இச்சுழியுள்ள மாட்டை எவன் வாங்குகிறானோ அவன் சீக்கிரம் தன்மனைவியை யிழப்பான். இச்சுழி மாட்டுக்குடையோன் மனைவியைக் கட்டாயம் கொல்லும்.

இவ்விதமாய்ச் சுழிகள் பார்ப்பது அங்கங்கே வேறுபட்டிருக்கலாம். ஆயினும் கீழே கூறியிருப்பது பொதுவாய் எங்கும் வழங்கிவருவனவைகளேயாம்.

### ஏறுபூரான்.

இது சப்பையில் வாலை ஒட்டிக்கீழ்ப்பக்கமாக ஒரு மேல்வளைந்திருந்தால் ஏறுபூரான். இது சாபத்தைக் கொடுக்கும் நல்லசுழி. இச்சுழியின், அடியில் வளைந்திருந்தால் இறங்குபூரான். இது கெடுதலான சுழி.

### லக்ஷ்மீ சுழி.

இது கழுத்தில் அதனுக்குத் தள்ளியிருப்பது சிலர் சங்குபுருவத்தை ஒட்டிக் காணப்படும் என்கின்றனர். இச்சுழியுள்ள மாடு சம்பத்தைக் கொடுக்கும். ஆகவே விலையும் அதிகம் கூறுவார்.

### முக்கண்டிச் சுழி, அக்கினிச் சுழி.

நெற்றியில் முக்கோணம் போன்று மூன்று சுழிபுள்ளது. இது உடையவனை அழித்துவிடும்.

### நடைமேல் நடை.

மாட்டின் நெற்றியில் ஒன்றின்மேல் ஒன்றாகவிருக்கும். இச்சுழியுள்ள மாடு கஷ்டத்தின்மேல் கஷ்டத்தை விளைவிக்கும்.

### விலங்குச் சுழி.

இது மாட்டின் முன்கால்களிலாவது பின்கால்களிலாவது, கணுக்குகளில் இருப்பது. இச்சுழியுள்ள மாட்டை வாங்குபவன் ஜெயில் வாசத்தையடைவன்.

### பாடைச் சுழி.

முதுகில் கடுக்கோட்டின் ஓரமாகச் சப்பையினருகில் இரண்டு பிளவாகக் காணுவது. எஜமானுக்கு மரணத்தைக் கொடுக்கும்.

### நாகபடம்.

இது வாலின் மேல்புறத்தில், மேல் எறிநாகபடம் போன்று வளைந்திருக்கும். இது நல்ல சுழி.

### இறங்கு நாகம், பின்நாகம்.

மேற்கண்ட மாதிரி மேல் ஏறாமல் கீழ்நோக்கி வளைந்திருப்பது. இது கெட்டசுழி.

—“இந்துநேசன்”

## தந்தை மகற்காற்று நன்றி.

—:o:—

“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.”

இம் மன்பதைக்கண்ணுள்ள மனிதன், விலங்கு, மாஞ் செடிகள் முதலான எண்ணிறந்த உயிர்கட்கு, ஒவ்வொன்றும் தன்னைக் காத்துக்கொள்ளுதற்குப் பசியுணர்ச்சியும், தனது இனத்தை என்றும் இடையறாது நிலைபெறச் செய்தற்கு, இணைவிழைச்சு அல்லது காம உணர்ச்சியும் (Sexual affinity) இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. நாம் வசிக்கும் இப் பெரிய உலகத்தில் நியாது நிகழும் மாறுதல்களும், புற்பல சமூகங்களின் ஆக்கமும் அழிவும், கோடானுகோடி அரசாங்கங்களின் தோற்றக்கேடுகளும், கேட்கும்போதே குருதி நட்டத்தைத் தடைசெய்ய வல்ல பயங்கரமான போர்களும், என்னும் இவைகட்கெல்லாம் முதற் காரணமாய் நின்று இயக்குவன மேற்கூறிப்போந்த இரண்டு இயற்கை யடிப்படை உணர்ச்சிகளுமேயாகும். இவ்விருஉணர்ச்சிகளையும் உயிர்கள் இயற்கைவழி நின்று போதியஅளவு அவ்வப்போது பயன்படுத்திக்கொள்வார்களானால் யாண்டும் சன்மார்க்கமும், செந்நெறியும் பரவும். அல்லாதின்றி இவ்வுணர்ச்சிகளை நெறியல்லாநெறிசெலுத்திச் சுயநலத்தால் உந்தப்பட்டு, தலைசெறிந்த வெற்றுடலுக்குமட்டும் சின்னேரம் இன்பத்தைத் தந்து மீட்டும் துன்பத்திலாழ்த்தும் இழிதுறைகளில் உயிர்கள் புகுவார்களானால் எங்ஙனும் போரும், கொலையும், அல்லலும், துக்கமுமே மலிகின்றன. கடவுள்நமக்கு நன்மைதீமைகளைப் பகுத்தறியும்ஆற்றலைத் தந்திருக்கின்றார். அதன் துணைக்கொண்டு தீயனவிலக்கி, நல்லன கடைப்பிடித்தல் உயிர்கள்கடன். செய்திவினையிருக்கத் தெய்வத்தை நோதல் என்பயன் விளைத்தற்கு? முற்கூறிய இரு உணர்ச்சிகளுள்ளும், மக்கட்பேற்றிற்கு இன்றியமையாத காரணமாயிருப்பது காம உணர்ச்சியாகும். தக்க பருவத்தில் இவ்வுணர்ச்சி எழுச்சிபெற்று அதனால் ஒன்றுபொருந்துகிற ஒருவனும், ஒருத்தியும் தங்களது செயல்களாலும் எண்ணங்களாலும் உலகத்திற்கு நன்மை செய்யவோ, அன்றித் தீமை இழைக்கவோ, பெரிதும் ஆற்றல் பெற்றிருக்கிறார்கள். விழுமிய நோக்கங்கொண்டு அதற்குரிய தவஞ்செய்வார்களாயின், ஒரு மீகாத்மாவை மீண்டும் தோற்றுவிக்கலாம். ஆனால் குரூர நெஞ்சினனும்க் காரணமின்றியே பிறரைவான்கொண்டறுத்தலைப்பொழுதுபோக்காக உடைய கொலைப்பாதகனையும் மேற்சொன்ன அவ்விருவரே தோற்றுவிக்கவும் முடியும். இந்நிலவுருண்டையின் மேற்பரப்பெங்கும் முதன் முதல் மக்கள் தோன்றிய நான் தொட்டு, இன்று காறும் மக்கட் கூட்டம் இடையறாது நிலைபெற்று வருகின்றது. இனியும் பல்லூழிகள் மக்கள் நிலைபெற்று வாழ்வார்கள். இப்பெருங் காலவரையறையினிடையே, பற்பல நன்மக்கள் தோன்றி, முன்னேற்றம் என்னும் ஒரு பெரிய தேரினைப்பிடித்திழுத்து அதன் செலவைத் துரிதப்படுத்தினார்கள். எனினும், அடுத்தடுத்துக் கீழ்மக்களும், கயவர்களும் உடனுக்குடன் தோன்றி, தமது ஆற்றலால் அத்தேரின் இயக்கத்தைத் தடுத்தும் அதனாற் பிறமக்களை வருத்தியும் வந்தார்கள். ஆகவே புதிது பொருந்தப்பெறுகின்ற இரு இளங்காதலரிடை எத்தகைய நினைவு முனைத்து நிற்றல் வேண்டும்? வெறுங்காம இச்சையா? அன்று; கொழுத்த தசைத்திரளின் பரிச உணர்ச்சியா? அல்ல; மற்றென்னையெனின் அறியாமை என்னும் இருளிலும், அவா என்னும் பெருங்கடற் சுழலிலும் சிக்கித் தவிக்கும் மக்களை ஒரு சிறிதேனும் முன்னேற்றவல்ல ஆண்டகையையல்லது ஒரு திலகவதியாரை யாம் ஈன்றெடுப்போமா என்னும் விழுமிய நோக்கம் அவர் தம் உள்ளத்தில் அரும்பியிருத்தல் வேண்டும். அந்நோக்கம் கைவரப் பெறுதற்குச் செயற்பாலனவற்றையுஞ் செய்தல் வேண்டும்.

ஒருநாடு இனிப்பெறவிருக்கும் செம்மையினையாதல், சீர்கேட்டையாதல், அந்நாட்டிடை நிகழும் மணமுறை, ஆண்பெண்களுக்குள்ள கூட்டுறவு, குழந்தைகளை வளர்க்கும்விதம் என்னும் இவைகளைக் கொண்டு நன்றாய்க் கூறிவிடலாம். என்னை, அம் மணமுறைகளும் கூட்டுறவும் மக்கட்பேற்றிற்குக் காரணமாயிருத்தலினாலும் அச்சிறு குழவிகளே பிற்காலத்தில் அந்நாட்டின் அரசியலை நடத்துவிப்போராகலானுமென்க. நாகரிகமுதிர்ந்த மேனாடுகளில் குழந்தை வளர்ப்புக்கெனப் பெரிய சங்கங்களும், அதைப்பற்றிக் கூறும் எண்ணிறந்த நூற்களும் இருக்கின்றன. இம்மட்டுமா! தாய்தந்தையர்களின் பெயர்சொல்லத் தெரியாத அநாதக்! குழவிகளை எடுத்து வளர்ப்பதற்கு வியன்னா (Vienna) நகரத்தில் பெரியதொரு விடுதிச்சாலை அமைக்கப்பட்டிருக்கின்றது. இதைவிடப் பெரியதொரு அறம் வேறொன்றிருக்குங்கொல்? தாம்பெற்ற குழவிகள் தம்மெதிரிலிருந்தும், மானக்கேட்டிற் கஞ்சி அவற்றைத் தாம் அங்கீகரியாமல், விட்டுவிட்ட பிறகு அவைகளின் கதி என்னுவது? ஆகவே, அவற்றினைப் புறக்கணிக்காது, காத்தல் நம்முடைய தலையாய கடனென அந்நாட்டினர் கருதுகின்றனர். இத்தகைய அநாதக்குழவிகளின் விடுதிச்சாலைகள் பிற்காலத்தில் பெரிய மேதாவிகளையும், சான்றோர்களையும், கல்வியாளர்களையும் தோற்றுவித்தன. நன்கு ஒருநாடு தந்தை முறையில் நின்று தாய்தந்தையற்ற குழவிகட்குத் தன் கடனாற்றுகின்றது.........

... ... ... ... ... .... ... ... ...

... ... ... ... ... ... ... ...

நம்மிந்திய நாடு இன்றுள்ள வெய்துயிருக்கும் சீர்கேட்டிற்கு அடிப்படையான முதற்காரணம் நம்மிடை நிகழும் மணமுறைகளும், ஆண்பெண் கூட்டுறவும், குழந்தைகளின் வளர்ப்பும் சரிய முறையில் நடைபெறாதலால் என்று மேனாட்டுடைய எந்த அந்நியனும் உடனே சொல்லிவிடுவான். ஆம்! யாம் ஒரு இந்தியனாயினும் என்ன? உள்ளகுறைபாடுகளை மறைக்காது ஒப்புக்கொண்டு அவற்றினை நீக்க முயல்வோனே தாய்க்குரிய தொண்டு செய்தவனாவான். நம் நாட்டில் அதிலும் நம் தென்றமிழ் நாட்டில் எத்துணைபேர் சீரிய நோக்கங்கொண்டு மணம்புரிந்து மக்கட்பேற்றிற்காக விழைந்து நிற்கின்றார்கள்? மேலும், நமது சமயக் கொள்கையின்படி—இது தப்போ ஒப்போ அறியேம் — ஒவ்வொருவனும் ஒவ்வொருத்தியும், இன்றியமையாத மணவாழ்க்கைக் குட்பட்டு மக்களைப் பெறுதல் வேண்டும். அவன் மிடியனாயினும் பிணியாளனாயினும் நபும்சகனாயினும், அங்கஈனனாயினும், மற்றும் எத்தகையோனாயினுஞ் சரி—தவறாமல் மணஞ்செய்து மக்களைப் பெறுதல் வேண்டும். அன்றேல், அவன் புத் என்னும் நரகத்தில் வீழ்ந்து வழிகள்தோறும் இடர்ப்படுவான், மக்களைப் பெறாதவன் “பிள்ளைப்பேறற்ற பாவி” என்று இகழப்படுகிறான். இவ்வசைமொழிக்கு அஞ்சி, நம்முட் பலர் மாற்றாருடைய பிள்ளைகளைச் சுவீகாரங்கொண்டும், அல்லது காப்பாற்ற வகையின்றியும், மேலும், மேலும் பல பெண்களை மணந்தும் அல்லற்பட்டுழல்கின்றனர். இத்தகைய ஆபாசக் குருட்டு நம்பிக்கையைத் தம் அளவிலேயே நிறுத்திக்கொள்ளாமல் மக்கள், பசு முதலிய ஒன்றுமறியா விலங்குகளினிடத்துஞ் செலுத்துகின்றனர். திவசம், திதி முதலிய காலங்களில் “அகத்திக்கீரைக்கட்டுக்களைக் கன்றினையுடைய பசுவிற்குப் பார்த்துக்கொடு” என்று நம் தாதையார் எமக்கு ஆணையிட்டதைக் கருதி யாம் பற்பல காலங்களில் நகைத்ததுண்டு. ஆகவே, நம்நாட்டில் பிள்ளைப் பேற்றைக் கருதித் தவங்கிடந்தோர் பலர்; ...... ..... ...

... ... ... ... ... .... ... ... ....

... ... ... ... \.. எனினும், எதனைக் கருதி, பெறுதற்கரிய மகப்பேற்றினையடைய நம்மவர் முயல்கின்றார்கள்? தாம் இறந்தபிறகு தமக்குக் கிரியைகள் செய்தற்கும், தமது பேரினைச் சொல்லுதற்கும், நெருப்பு யாற்றின் குறுக்கே மயிர்ப்பாலத்தின்மேல் ஒரு பசுவின் வாலைப் பிடித்தேறுதற்குக் கீழே ஒருபார்ப்பனனுக்குப் பசு ஒன்றினைத் தானஞ் செய்தற்கும் பிள்ளை வேண்டுமென்று ஒருசிலர் விழைகின்றார்; இறந்தபட்டபின் கொள்ளியிடுதற்கும், நெய்ப்பந்தம் பிடித்தற்கும் வேறு சிலர் தான் முளைகளை வேண்டுகின்றார்; தாமும் உண்ணாது, பிறர்க்கும் ஈயாது மலைமலையாய்ச்சேமித்து வைத்த பொற்குப்பைகளைச் செலவிடற்குப் பிள்ளையில்லையேயென்று மற்றுஞ் சிலர் ஏங்குகின்றார்; தன்னுடைய தமையனுக்கு ஒரு பெண் பிறக்குமுன், அப்பெண்ணிற்கு மணாளனாக ஒரு மகனைப் பெற ஆத்திரப்படுவாள் ஒரு பெண்; தனது மாற்றாள் மூன்று பிள்ளைகளையும், இரண்டு பெண்களையும் ஈன்றெடுத்தால், அதற்கீடாகத் தானும் மூன்று பிள்ளைகளையும், இரண்டு பெண்களையும் பெறச் செயற்கரியனவெல்லாம் செய்வாள் மற்றொருத்தி.

“மற்றொருவர்தயவு எனக்கு ஏற்றுக்கு! யான் இறந்தால், பிணத்தைத்தூக்குவதற்குச் சரியாக நான்கு பிள்ளைகளும், பாடையின்கீழ்ப் புரண்டழுவதற்கு ஒரு பெண்ணும் இருக்கின்றன்” என்று ஒரு நரைமுதியாளர் இறுமாந்தார். மணஞ்செய்து கண்ணாரக் காணவேண்டி, பிள்ளைவரங் குறித்துத் தவங்கிடப்போர் இன்னுஞ் சிலர்; “யான் இறந்தபட்டபின், எம்மாற்றானோடு மன்றத்தில் வாதுபுரிந்து, அவனைக் கெடுப்பதற்கு ஒரு பிள்ளை யில்லையே” என ஏங்குவார் பலர். அன்பர்களே! இவையெல்லாம் எத்துணை “விழுமிய” நோக்கங்கள் பார்மின்! இத்தகைய எண்ணங்கள் மக்கள் அகமும், புறமும் ஊடுருவிப் பாய்ந்து நிற்கும் இந்நாட்டில் அடிமைகளும், கயவர்களும், பயங்கொள்ளிகளுமேயொழிய, யாங்ஙனம் வீரர்களும், ஆண்டகைகளும், சான்றோர்களும் தோற்றுவார்கள்?

சபிக்கப்பட்ட நமது நாட்டில், தாயின் முலையைச் சுவைத்துக்கொண்டிருந்த ஒரு சிறு பெண் குழவி, பதறப்பதற இழுக்கப்பட்டு, மணப்பந்தரில் உட்காரவைத்துத் தாலி கட்டப்படுகிறாள். தன்னைச் சுற்றிலும் எண்ணிறந்த ஜனங்களையும், இடியோசைபோன்ற அவர்களது பேரிரைச்சலையும் கண்டு மருளாவண்ணம், விளையாட்டுக்காக, அவள் கையில் ஒரு வாழைப்பழம் கொடுக்கப்படுகின்றது. மணம் இன்னதென்றும், கணவன் மனைவி என்னுமிருவர்க்குள்ள தொடர்பு இப்பெற்றித்தென்றும் அறியாத அவ்விளம்பெண், சின்னாட்களில் தாயாகின்றாள். தன்னுடைய தாயின் மடிமேல் தான் படுத்திருப்பதற்குப் பதிலாக, தன் மடிமேல் முழங்கையளவுள்ள ஒரு குழவி யிருப்பதைக் கண்டு, அவள் பைந்தளிர் போன்ற மேனி நடுக்குறுகின்றது. அக்குழவியை அவள், தன்னைக் கொல்ல வந்த கூற்றுவனாகப் பாவிக்கின்றாள். அவள் தன் உடல்நிலை, மீள வழியின்றி, அறக் குலைகின்றது. மேல் நடப்பது யாம் சொல்லவேண்டுவதின்று.

(வரும்.)

—குமரன் ஆண்டு மடல்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.